**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, AVINASHI**

**MCOP. No.31/2018**

**RW - 2**

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : லாசர் ஆண்டனி | | : | |
| **Father Name** | : | | : | |
| **Village** | : | **Calling** | : | |
| **Taluk** | : | **Age** | : | /2024 |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 9th day of January 2025.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பூர் ஈட்டிவீரம்பாளையம், அறிவொளி நகரில் வசித்து வருகிறேன். எனக்கு இந்நீதிமன்றத்திலிருந்து வரப்பெற்ற அழைப்பாணையின் பேரில் நான் நேரில் சாட்சியம் அளிக்கிறேன். நான் கடந்த 26.06.2017–ம் தேதியன்று இரவு சுமார் 9.15 மணிக்கு ஆரோக்கியசாமி என்பவருக்கு சொந்தமான TN 55 AM 0185 என்ற மாருதி Ertika என்ற காரை ஊத்துக்குளி – படியூர் செல்லும் தென்வடல் ரோட்டில் தெற்கிலிருந்து வடக்காக ஊத்துக்குளி நோக்கி காரை நான் ஓட்டிக்கொண்டு வந்த போது ஊத்துக்குளி ரயில்வே பாலத்திற்கு இடதுபுறமாக வளைவதற்கு முன்பாக மேற்குப்புறமாக உள்ள கட் ரோட்டின் வழியாக வேகமாக வந்த ஒரு இரு சக்கர வாகனம் நான் ஓட்டிச் சென்ற காரின் இடது புற முன்பக்க கதவு மீது மோதி விபத்து ஏற்படுத்தி விட்டது. அந்த விபத்தில் எனது காருக்கு இடது முன்பக்க கதவு, அதற்கு முன்பாக காரின் இடது முன்பக்க பகுதி ஆகிய இடங்களில் சேதம் ஏற்பட்டு விட்டது. அந்த இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் வண்டியோடு கீழே விழுந்து விட்டார். அவர் குடிபோதையில் மயங்கி இருந்தார். பின்பு அவரை பார்த்து விட்டு அப்போது அங்கு வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்த ஊத்துக்குளி

போலீசார் அங்கு வந்து விட்டார்கள். எனக்கு விபத்து சமயம் வாகனம் ஓட்ட ஓட்டுநர் உரிமம் இருந்தது. தற்போதும் வாகனம் ஓட்ட ஓட்டுநர் உரிமம் எனக்கு இருக்கிறது. இந்த விபத்தானது இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபரின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது.

<u>**குறுக்கு விசாரணை**</u>

நான் இந்த வழக்கில் 1–ம் எதிர்மனுதாரராக கட்சி சேர்க்கப்பட்டுள்ளேன் என்றால் அது எனக்குத் தெரியாது. இந்த வழக்கில் நீதிமன்றத்திலிருந்து எனக்கு அறிவிப்பு சார்வு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு எந்த நோட்டீசும் வரவில்லை. குற்ற வழக்கானது எனது பெயரில் தான் ஊத்துக்குளி போலீசார் பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். விபத்து நடந்த இடமானது வளைவான பகுதி என்றால் 200 மீ தள்ளி தான் வளைவு உள்ளது. சம்பவ இடத்தில் வேகத்தடை எதுவும் இல்லை. எனக்கு இந்த வழக்கில் முறையாக அறிவிப்பு சார்வு செய்யப்பட்டும், நான் இந்த வழக்கில் ஆஜராகி எதிர்வழக்காட முன்வராமல் இருந்து வந்துவிட்டு, தற்போது காப்பீட்டு நிறுவனத்திற்கு ஆதரவாக அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.01.09 15:55:38 +0530

**Subordinate Judge,**
**Avinashi.**